




வாடகை போன வீடுகள் எல்லாம் இப்போது இங்கு 15000 ரூபாய் வாடகைக்குப் போகின்றன. அப்படி வாடகைக்கு எடுத்து ஒரே வீட்டில் அல்லது அறையில் 15 மாணவர்கள்கூடத் தங்கிக் கொள்கிறார்கள்.

இது மட்டுமின்றி மாணவர்களுக்குள்ளேயே உள்வாடகைக்கு விட்டு சம்பாதிக்கும் வட இந்திய மாணவர்களும் இருக்கிறார்கள். அதுதவிர இந்த மாணவர்களுக்கு பிளாக்கில் சிலிண்டர் 1000 ரூபாய் வரை விற்கப்படுகிறதாம். இப்படி வட இந்திய மாணவர்களின் ஆதிக்கத்தில் லோக்கல் மாணவர்கள் மட்டுமின்றி, உள்ளூர் வாசிகளே அப்ஸெட்டாகிப் போயிருக்கிறார்கள். இதனால்தான் அடிக்கடி இங்கு வட இந்திய மாணவர்கள் மீது தாக்குதல் நடக்கிறது.



மாசானமுத்து

அதேபோல் கடந்த ஆண்டு தமிழக மாணவர்களுக்கும், வட இந்திய மாணவர்களுக்கும் நடந்த சண்டையில் கத்திக் குத்து எல்லாம் நடந்தது. இப்பிரச்சினையைத் தீர்க்க கடைசியில் வடஇந்திய மாணவர்களுக்கான தனி ஹாஸ்டல் வைக்கப்பட்டது. ஆனாலும் நிலைமை இன்னும் சரியாகவில்லை. ஏனென்றால் அத்தனை ஆயிரம் பேருக்கும் ஹாஸ்டல் கட்டுவது என்றால் நடக்கிற காரியமா? இந்நிலையில் விபத்தில் இறந்த மாணவன் விஷயத்தை ஹோலி பண்டிகைக்கு விடுமுறை இல்லாமல் போனதற்குப் பயன்படுத்திக் கலவரம் செய்தனர். கடைசியில் அப்பாவி மாணவர்கள் மூன்று பேர் பலியான பரிதாபம் நடைபெற்றது" என்றவர்கள்,

“இதற்கெல்லாம் மாணவர்கள் நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் இல்லாமல் போனதுதான் காரணம். அதுமட்டுமின்றி வட இந்திய மாணவர்களை அதிக எண்ணிக்கையில் என்ஜினியரிங் மற்றும் மருத்துவக் கல்விகளில் சேர்ப்பதும் இன்னொரு காரணம். முதலில் இங்கு நடக்கும் அட்மிஷன் முறையை மாற்றாமல் இது போன்ற கலவரங்களை அடக்குவது மிகவும் சிரமம்” என்று ஆதங்கப்பட்டனர்.

இந்நிலையில் நாம் துணைவேந்தர் ராமநாதன் என்ன சொல்கிறார் என்பதை அறிய அவரிடமே பேசினோம். அவர், “ஹாஸ்டலில் இருந்த வடமாநில மாணவர்கள் யாரும் இந்தக் கலவரத்தைச் செய்யவில்லை. வெளியில் தங்கியுள்ள மாணவர்கள் சிலர் செய்த விஷயம் இது. அவர்கள் யார், யார் என்று லிஸ்ட் எடுத்து வருகிறோம். அவர்கள் மீது கண்டிப்பான நடவடிக்கை இருக்கும்” என்றனர்.

விழுப்புரம் சரக டி.ஐ.ஜி. மாசானமுத்துவிடம் பேசினோம். அவர், “விபத்துக்குள்ளான மாணவருக்கு சரியாக சிகிச்சை அளிக்கவில்லை என்பதும், ஹோலிப் பண்டிகைக்கு விடுமுறை அளிக்கவில்லை என்பதும் காரணங்களாகத் தெரிகிறது. ஆனால் ‘விபத்திற்குள்ளான மாணவரை மூன்று டாக்டர்கள் போட்டு ஜிப்மெர் ஆஸ்பத்திரிக்கு அனுப்பினோம்’ என்று பல்கலைக்கழக நிர்வாகம் சொல்கிறது. எங்களைப் பொறுத்தமட்டில் சட்டம்-ஒழுங்கை நிலைநாட்டத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். யாரும் சட்டத்தைக் கையிலெடுக்க விடமாட்டோம்” என்றார் உறுதியாக.

இதற்கிடையில் மாணவர்கள் மூன்று பேர் தண்ணீரில் இறந்த சம்பவம் தொடர்பாக ஆர்.டி.ஓ. தலைமையில் விசாரணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. வட இந்திய மாணவர்கள் மத்தியில் உள்ள டென்ஷனைக் குறைக்கும் பொருட்டு தண்ணீரில் மூழ்கி இறந்து போனவர்களின் குடும்பத்தில் ஒருவருக்கு வேலை போட்டுக் கொடுக்க பல்கலைக் கழக நிர்வாகம் முன் வந்திருப்பதாகத் தகவல். இது தவிர விபத்தில் இறந்து போன மாணவனின் அனைத்துச் செலவுகளையும் பல்கலைக்கழக நிர்வாகமே ஏற்றுக் கொண்டுள்ளது. இப்போதைக்கு காலவரையறையின்றி பல்கலைக்கழகம் மூடப்பட்டுள்ளது. ஆர்.டி.ஓ. விசாரணை முடிவடைந்து அறிக்கை வெளிவந்தால்தான் உண்மை நிலை தெளிவாகும். ஆனால் பீஹார் மாநில முதல்வர் நிதிஷ்குமார் ‘எங்கள் மாநில மாணவர்களுக்குப் போதிய பாதுகாப்பு வழங்குங்கள்’ என்று முதல்வர் கருணாநிதிக்கும், உள்துறை அமைச்சர் ப.சிதம்பரத்திற்கும் கடிதம் எழுதியிருப்பது பல்கலைக்கழக வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. ☆